ஓலை 134| ஓசை 257| ஆகஸ்ட் 2025

# அகர முதல இலக்கியப் பேரவை



## காந்திய கவிஞர் – இராமலிங்கம் பிள்ளை

# கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்

## பொருள்

முயற்சி ஒருவனுக்குச் செல்வத்தைப் பெருகச் செய்யும், முயற்சி இல்லாதிருத்தல் அவனுக்கு வறுமையைச் சேர்த்துவிடும்.

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847


அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி


**97, குஞ்சிதபாதம் நகர்,**
**டவுன்ஸ்டேஷன் தென்புறம்,**
**மயிலாடுதுறை-609001.**


# அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## நெஞ்சை யொளித்தொரு வஞ்சக மில்லை!

பாவகை : குறள் தாழிசை




நீரறியா வண்ணமாக நீரினம் உயிர்க்காதே:
நீரறிந்த நெஞ்சமேவஞ் சம்.

மேகமறி யாமல் மழைமேகம் பொழியாதே;
ஆகநெஞ்ச றிந்தவஞ்சம் ஆம்.

கண்ணறி யாமல்தாம் காட்சிக் காணவாகும்?
எண்ணிடாமல் கீழ்மையு மேது?

மண்ணினது நெஞ்ச மறியா ஊருணியோ
மண்ணிலோடும்? நெஞ்சறிந்தே மாந்து,

கற்றறியார் கற்கவாமோ? கற்றவர்போல் மனமதுவே
பற்றி இடர்படரும் பார்!

கண்பார்வை இல்லாமல் காட்சிக் காணவாகும்?
எண்ணியதால் நெஞ்சம் இடர்.

நெஞ்சை யொளித்தொரு வஞ்ச மில்லையே;
நெஞ்சறிந்தே எல்லாமும் நீடு!




**இலக்கணக் குறிப்பு:**

தாழிசையால் அமைந்த குறட் பாக்கள். ஒவ்வொரு குறட் பாவிலும் முதலடியின் நான்காம் சீர் வெண்டளை கெட்டு.(நீரினம் - உயிர்க்காதே- நிரை முன் நேர் வராமல் நிரை முன் நிரை வந்ததால் வெண்பாவுக்குரிய தளை கெட்டு) கலித்தளை வந்ததால் இக் குறட் பாக்கள் குறள் தாழிசையாயிற்று. மேலே அடைப்புக் குறியில் முதல் குறளைச் சுட்டியது போல் எல்லாக் குறளிலும் நான்காம் சீர்களின் தாழிசையில் நான்கு இனமுண்டு. வெண்டாழிசை, ஆசிரியத் தாழிசை, கலித்தாழிசை, வஞ்சித்தாழிசை என்று அறிக. தளைகளை நோக்குக.

# செயல்

பாவகை : குறள் வெண்பா

1. எண்ணிய எண்ணம் எடுப்பாய் அமைந்திடத்
திண்ணமாய் உள்ளல் திறன்.

2. செய்வன நாளும் சிறியனவாய் இல்லாமல்
செய்தே உயரல் சிறப்பு.

3. ஊக்கமாய் நன்றாக உள்ளியே செய்பவை
ஆக்கம் பெருக்கும் அரண்.

4. செய்வதை நச்சியே செய்தால் சிறக்கும்
செயலை நாளுமே செய்.

5. கடமைக்காய் செய்யாமல் கள்ளமின்றி செய்தால்
மடமை விலக்கிடும் மாண்பு.

6. சிந்தையில் எண்ணியதைச் சீராக நித்தமும்
நிந்தையின்றிச் செய்தல் நிறை.

7. முயற்சியைக் குற்றமின்றி முன்னேறச் செய்ய
பயிற்சியைத் தொடரப் பயில்.

8. நற்செயல் தன்னை நலிவின்றிச் செய்யக்
கற்றலை மேம்படுத்திக் காண்.

9. செயலால் வாழ்வைச் சிறந்திட வைத்தல்
நேயம் வளர்த்திடும் நேர்.

10. வன்செயல் என்றும் வளத்தைக் கெடுத்திடும்
புன்செயல் என்றே உணர்.



கவிஞர் செ. கலைவாணி

புகைப்படப் போட்டி
குப்பைத் தொட்டி முதலிடம்
வென்றது பசி



கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# மரம்

அதுவொரு
பெயர்த்தெரியாத மரம்.
என் மீது கருணைக் கொண்டு
அதன்மேல்
ஏறவிட்டிருக்கிறது என்னை.

பாசத்துடன்
தழுவியபடி தோளில் சுமந்து
காய்களையும் கனிகளையும்
தந்து என் பசியாற்றி உபசரித்து
என்னைக் கீழிறக்கிவிடும்.



அந்த நம்பிக்கை
என்னுள் இறுக்கமாய்
இருக்கிறது.
அதே நம்பிக்கை
உங்களிடமும்
இருக்கும் பட்சத்தில்.
அப்பெயர்த்தெரியா மரம்
உங்களையும்
உற்ற நண்பனாய் பாவிக்கும்.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# படர் மெலிந்து இரங்கல்

## அதிகாரம் : 117



தலைவன் பிரிவால்
தலைகொண்ட நோய்.
மறைக்க இயலாது
ஊற்றுநீராய் சுரந்துபெருகுதே.

பிரிவுநோயை பிறரறியாது
மறைக்கவும் இயலாது.
தலைவன்பால் உரைக்கவுமியலாது
வெட்கமுறுகிறாள் தலைவியே.

காமமும்வெட்கமும் ஒருசேர
காதலியின் இன்னுயிரை.
காவடித்தண்டாய்க் கொண்டு
இருமுனைகளிலும் தொங்குகின்றனவே.

கடல்போல் ஆழவீதியாய்
கொண்ட காதல்நோயை.
கடந்து கரைசேர
தெப்பம் ஏதுமில்லையே.

நட்பாய் இருக்கையில்
துன்பம்செய் காதலன்.
பகைவன் ஆகிடின்
என்னதான் செய்வரோ?.

காமத்தால் வருமின்பம்
கடல்போல் பெரிதாமே.
காதலின் பிரிவுத்துன்பமோ
கடலைவிடப் பெரிதாமே.

காமத்தின் எல்லைகாணாது
நள்ளிரவில் காதலர்மட்டும்.
துணையின்றி உறங்காது
விழித்திருந்து வாடுகின்றனரே.

ஊரெல்லாம் உறங்க
காதலர் மட்டும்.
இரவுக்குத் துணையாக
காமநோயால் விழித்திருப்பரே.

பிரிவுத்துயரால் இரவு
மெல்லவே நகர்கின்றதே.
இஃது பிரிந்தகாதலரின்
கொடுமையிலும் பெருங்கொடுமையே.

மனதைப்போல் கண்களும்
தலைவனிடம் விரைந்துசென்றால்.
காதலி கண்ணீர்கடலில்
நீந்திட அவசியமில்லையே.

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோயில்

# பூவும் பிஞ்சும் உதிராமல்!



கல்லும் பொல்லும்
உங்கள் கைகளிலே
காத்துக் கொண்டு
நிற்கிறீர்கள் அருகினிலே
எல்லாக் கல்லும்
பொல்லும் எனக்குத்தானே
எறியுங்கள் எறியுங்கள்
கைகள் கடுக்கும்முன்னே!
***

யார்முதற் கல்லை
எறிவதென்ற யோசனையா?
யாருக்கும் பட்டுவிடும்
என்ற ஏக்கமுமா?
பார்த்துத்தானே எறிவீர்கள்
படாமல் போகுமோ!
பாரதத்து ஏகலைவர்கள்
நீங்கள் அல்லவோ!
***

காற்றும் வீசுதே
உங்கள் பக்கம்
காலமும் நிற்குதே
அக்கம் பக்கம்
ஆற்றலும் உள்ளதே
அனைவர் உள்ளும்
அதிகநேரம் தேவையோ
அவதானமாய் எறிவதற்கின்னும்?
***

பூத்தேன் காய்த்தேன்
கனியும் உண்டே!
பூவாகாயா - உங்களுக்குக்
கனியா வேண்டும்?
பாத்தேன் உங்களின்
படைப் பலத்தை!
பலரில் பெறுவதுயார்
முதற் பழத்தை?
***

ஊரின் பொதுவிலே
ஊமையாய் நிற்கின்றேன்
உயர் அறிவில்லை
ஓரறிவே எந்தனுக்கே
பாரின் பசுமையே
'பச்சைகள்' நாம்தானே
பலதில்லை இன்று
ஊருக்கே ஒன்றுதானே!
***

நாளைய தலைமுறைக்கும்
நானே வேண்டும்
நற்பயனாயிரம் அவர்களுக்கும்
பயக்க வேண்டும்
ஏழைக்கும் பணக்காரனுக்கும்
என்நிழலே வேண்டும்
இறப்புவரைக்கும் எமதின்
இலைதானே உம்இதயமுமே!

கவிஞர் சரஸ்வதி புத்திரன் (சரவணமுத்து நவேந்திரன்), ஈழ(ம்) வளநாடு

# உறவின் பிரிவில் ஓர் தாயின் உள்ளக்கிடக்கை!

உனையன்றி உயிரொன்று உறவாடுதே
இதிலென்ன வழி தேடலோ
கண்களிலோ ஓர் பனிக்கூட்டம்
என்னென்ன உன் நினைவுகளோ
கடல் சீற்றத்தின் பேரலைகளாம்
இக்கரை மீது மோதுவதென்ன!

நொறுங்கிய சுடுமண் பாண்டமாய்
போர்க்களத்தில் முன்னிற்கும் சிப்பாயாய்
கல்லறை தோட்டத்தின் நினைவுத்தூணாய்
ஆவல்களை வெளிப்படுத்தாது நிர்க்கதியாய்
வெண்ணிலவையும் மறைக்கும் கருமேகமாய்
இவ்வுலகில் அனைத்தும் எனக்கெதிராக!



நீயின்றி உயிரிங்கே ஊசலாடுதே
உனைக் காண வழியின்றி
மனம் இங்கே ஓய்வின்றி
நீரினின்று வானுயர்ந்த மேகங்களாய்
பசுமையிழந்த பாலை நிலமாய்
மனம் இங்கே ஊஞ்சலாடுதே!

சிப்பிக்குள் முத்தாய் ஒளியிழந்தேன்
நத்தையாய் உலகில் தவழ்கின்றேன்
என்னாசை சொல்ல தவிக்கின்றேன்
கழுகாய் சிறகடிக்க முயல்கின்றேன்
சுரங்கத்தினுள் ஒளிக்கீற்றாய் பயணிக்கின்றேன்!
உலக சமுதாயத்தின் ஆணவத்தால்!

உயிர் கொடுத்த இறைவனுக்காய்
உடல் தந்த பெற்றவர்களுக்காய்
உறவு கொடுத்த தாய்மைக்காய்
உயிர் மீள வாழ்கின்றேன்
காலம் கடக்க விழைகின்றேன்!
கால தூதன் வருமட்டும்!

கவிஞர் செல்வக்குமரன் சுரேஷ்குமார், சீனா

நான்கு தெருக்கள் சந்திக்கும்
அந்த நெரிசலான இடம்
வெயில் மழை பனி
எந்தப் பருவநிலையும்
எதிர்கொண்டு

நாள் தவறாமல்
நம்பிக்கையின் மணத்தை
கையில் ஏந்திய ஊதுபத்தியுடன்
மெல்லிய குரலில் விற்கும்
அந்தப் பெரியவர்.

கடந்து செல்லும் அவசர
இயந்திர வாழ்வில்
எவருடைய கவன ஈர்ப்பிற்கும்
உட்படா
அவரும், அவருடைய குரலும்.



வாழ்வின் நறுமணங்களை
ஒரு காலத்தில்
சுவாசித்தவராக இருத்தல் வேண்டும்.

பிச்சை எடுக்காமல்
கூன் விழுந்த அவரின்
கூன் விழா நம்பிக்கைக்காக
என்றேனும்
ஒரு கட்டாவது வாங்கி இருக்கலாம்.

அடக்கப்பட்ட அவர் உணர்வுகளின்
போராட்ட வாழ்விற்காகவாது
வாங்கியிருக்கலாம்.

அவரைக் காணாத நாளிலிருந்து
உயிர்த்தெழுந்து புகைந்து கொண்டிருக்கிறது
நெஞ்சின் ஒவ்வொரு மூலையிலும்
அவரது நினைவு
அழிக்க முடியா அவஸ்தையாக!!

கவிஞர் மலர்மகள், மதுரை

# தோழியே

என் ஒற்றைத் தோழி நீயடி
இரட்டைக் காப்பியமே-நீயும் நானும்,
மூன்று காலங்களிலும் இருக்கும் நம் நட்பின் சிறப்பு,
நான்கு திசையும் ஒலிக்கட்டும் நான் நட்பின் தாரக மந்திரம்,
ஐந்து திணைகளிலும், பறக்கட்டும் நம் நட்பின் கொடி,
ஆறு சுவைகளையும் மிஞ்சிடும் நம் நட்பின் கதை,
ஏழு கடல் தாண்டியும் ஒலிக்கும் நம் நட்பின் ஸ்வரங்கள்,
எட்டாக்கனி போல் மற்றவர்களுக்கு நம் நட்பின் கனி,
நீயும் ,உன் நட்பும் எனக்கு என்றும் நவரத்தினமே,
பத்துப்பாட்டுக்கு இணையானது நன் நட்பின் பாட்டு.



கவிஞர் ஐப. சுரேகா, திண்டுக்கல்

# நட்பு என்பது

(ஒரு மூச்சின் நீண்ட அர்த்தம்)

நட்பு என்பது
சில்லென்ற காற்று போல
தோளில் கை வைத்துச் செல்லும் நிழல்,
கேள்வி இல்லாமல் நம்மை புரிந்து கொள்கிறது.



பூக்கள் காயும் பருவத்தில் கூட
நம்முள் வாடாதது அது மட்டும்தான்,
மனதில் இடம் கேட்டதில்லை
ஆனாலும், எல்லாம் உடன் பகிர்ந்தது.

ஒரு சின்ன சிரிப்புக்காக
பாதி இரவில் தொலைபேசியில்
விழுந்த வார்த்தைகள்,
"இன்னும் தூங்கலா?" என்ற கேள்வி
நமக்கு மருந்தாய் உரைந்திருக்கிறது.

நட்பு என்பது
நாமும் உயிராய் வாழக்கூடிய
மாற்றுவாதமற்ற பாசத்தின் பெயர்.
அதில், விலகல்கள் இல்லை, வெறுப்புகள் இல்லை,
தெரியாத காலத்திலும், அது ஒரே முகம்தான்.

நாம் பேசிய இல்லாத நாட்களிலும்
அவர்கள் நினைத்திருந்தார்கள் என்பது
நட்பின் உண்மையான அடுத்த வரி.

நட்பு என்றாலே
ஒரு கவிதை தன்னைத்தானே
எழுதிக்கொள்ளும் கதை!

கவிஞர் ம. ஹரீஷ், பாலூர் (செங்கல்பட்டு மாவட்டம்)

# திறனில்லா வேந்து

இன்னல் இழைத்த கூளியர்
இறைவன் இல்லாது போனான்.
அன்பொழுக்கம் நிறைந்த நிலத்தில்
அரம்பர் கூட்டம் விதைத்த வன்மம்
அண்டர் கொடி  நட்பால்
தீராப் பகை யேற்று வீழ்ந்தான்.

அரம்பர் கூட்டத்தின் செருக்கு
அறுக்க மறுத்த  பேயாட்சி
தண்டத் தொகை யளித்து
தவறை ஒப்புக்கொள்ளும்
திறனில்லா வேந்து.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ் நாடு

# சாதியப் பேய்

சாதியப் பேயின் சாக்கடை வாயை
மூடிட என்றும் வழியில்லையா ?
சாதியப் பேயின் கூரிய நகத்தைக்
குத்திக் கிழிக்கவும் மனமில்லையா ?

சாதியப் பேயின் கரங்களை நறுக்கும்
கருவிகள் செய்யப்படவில்லையா ?
சாதியப் பேயின் சங்கைக் கடிக்கும்
பற்கள் இன்னும் முளைக்கலையா ?

சாதியப் பேயின் கோரப் பசியைக்
கொன்று குவிக்கவும் துணிவில்லையா ?
சாதியப் பேயின் குருதிக் குளியலைத்
தடுக்கவும் அரசுக்குத் திறனில்லையா ?



ஆணவக் கொலையை ஆவணப் படுத்தி
அடுத்த வேலைக்கு ஆயத்தமா ?
கால மரத்தின் கடைசி இலையாய்
கவினின் கொலையும் உதிரட்டுமே

சாலையில் காய்ந்த சகதியைப் போல
சாதியும் நிலத்தில் காயட்டுமே
வேற்றுமை வெடிகளை உற்பத்தி செய்யும்
சமூக ஆலைகள் இடியட்டுமே.

ஏற்ற தாழ்வுகள் எதுவும் இன்றி
நாளைய பொழுதும் விடியட்டுமே.

கவிஞர் மதுரகவி, வண்டியூர், மதுரை

# எனது விழியில் உனது பார்வை



புன்னகைப்பூவே பூந்தென்றலே
புத்துணர்ச்சி என்னுள்ளே
புருவத்தின் அழகை
புனைந்தேன் கவிதையிலே

புன்முறுவல் பூத்திட
புளகாங்கிதம் அடைந்தேனே
புதுமைப் பெண்ணாய்
புகுந்தாய் உள்ளத்திலே

புரவியின் வேகத்தில்
புவியும் சுழல்கிறதே
புள்ளியிட்டக் கோலமே
புகழ்கிறேன் உன்னையே

புதுமலராய் மலர்ந்து
பதுமை ஆனவளே
காதலால் ஈர்த்தவளே
கானக்குயிலான நங்கையே

காத்திருந்த தருணமெல்லாம்
காரிகையின் நினைவுகளே
எனது விழியில்
உனது பார்வை

காட்சியாவும் ஒளிர்ந்திட
காரிருள் மறைந்ததே
வானத்து வெண்ணிலவே
வாழ்ந்திடலாம் வாராயோ

வாழ்வில் இனிமையும்
வசந்தமாய் மாறிடுமே
நளினத்தில் நாட்டியமாடும்
பூந்தளிர் ஓவியமே

காவியத்தின் நாயகியே
கார்குழல் தேவதையே/
விலகிடாத பந்தமே
வியப்பூட்டும் சொந்தமிதுவே.

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# பிரிவுக்கு நன்றி

உன் கண் பாஷை புரிதலும்
தேவை இல்லை,
உனக்கான கண் விழித்தலும்
தேவை இல்லை
பிரிவுக்கு நன்றி

உன் ஆசைக்கு
ஓடவும் தேவை இல்லை,
உன் அருகாமை வேண்டி
தவிர்க்கவும் தேவை இல்லை
பிரிவுக்கு நன்றி



பேருந்து தரிப்பிட
காத்திருப்பும் இல்லை,
என் வீட்டுக்கே நள்ளிரவில்
வருகை இல்லை
பிரிவுக்கு நன்றி

உன் உறவுகளினால்
ஜாதி கொலை தேவையும் இல்லை,
என் குடும்பம் நான் இன்றி
கரைதலும் தேவை இல்லை
பிரிவுக்கு நன்றி

என்னை என் குடும்பத்திற்காக
விட்டு தந்தமைக்கும்,
உன் பிரிவினால் ஏற்பட்ட
வேதனையோடு சேர்ந்த இன்பத்திற்கு
மிக்க நன்றி

என்னை எனக்காக தந்து,
என்னை வாழவிட்ட
உன் பிரிவுக்கு
மிக்க நன்றி

கவிஞர் என். ரிஷானா, ஓட்டமாவடி, கிழக்கிலங்கை

# நிர்வாணம்

நிர்வாணம் என்று
ஏதுமில்லை
நிர்வாணம் என்ற
சொல்லை தவிர !

நிர்வாணத்தில்
நிறைய நிறைந்தும்
இருக்கிறது;
நிறையாமலும்
இருக்கிறது;

நிர்வாணம்
நிலையானது
நாணம் தான்
உணரப்பட்டது
அல்லது
உணர்த்தப்பட்டது!

பூமி பகலில்
ஒளியையும்
இரவில் இருளையும்
உடுத்தி இருக்கிறது !

ஒளியாடையும்
இருளாடையும்
எவற்றாலும்
எவராலும்
நெய்யப்பட்டதல்ல!

அது தேகத்தை
போன்றே
இயற்கையானது
உயிரினங்களுக்கு
இயல்பானது!

நிர்வாணத்தை
உடுத்தி நாம்
பிறக்கிறோம்
நிர்வாணத்தை
உணராமல்
இறக்கிறோம்!

துரியோதனன்
நிர்வாணத்தை
ஏற்காததால் பீமனின்
கதை வீழ்த்தியது!

கோபியரை
கண்ணன்
நிர்வாணப் படுத்தியது
மோகத்திற்கு அல்ல
ஞானத்திற்கு!



கவிஞர் கவி. சுகிரத்னம் (இரா. தியாகராஜன்), சென்னை 19

# சாக்லேட்

தித்திக்கும் தேனே
திகட்டாத சுவையே
இன்பமாய் இணைந்து
இருட்டறையில் அமர்ந்து
பரிமாறி உண்ணும்
பல வண்ண மிட்டாய்களே!
நாக்கின் ருசி மாறாமல்
திருடி சென்று மறைத்து
வைத்து தின்றும்
புளிப்பு மிட்டாய்களே!
வண்ணங்களின் ஈர்ப்பால்
இவைகளுக்கு அடிமையானேனே!
இது எல்லாம் ஒரு பொற்காலம்
யாவராலும் மாற்றிட முடியாத
நினைவுகளே!
அழிக்க இயலாத பந்தம்
மறுபடியும் கிடைக்க பெறாத
அழகிய நாட்களே!



கவிஞர் மோனிஷா

# இடைவெளி தேவைதானா?

உயிருள்ள காந்தய் நீயும் நானும்
தூரத்து இடைவெளியிலும் மனங்கள் இணைந்து
இடைவெளி குறைந்ததும் கரங்களை பற்ற
முகத்திற்கு முகம் மூச்சுக்காற்று பரிமாற
இதழ்கள் நான்கும் ஈரப்பட்டு நனைததால்
என் இதயம் இரட்டிப்பாய் துடிக்கிறது
கொஞ்சம் சுவாசத்தை உறிஞ்சி எடுப்பாயா?
இதயம் இரண்டும் இளைப்பாறட்டும் கொஞ்சம்
எந்தன் தோளோடு நீ சாய்ந்ததால்
மார்கழிப் பனியும் சித்திரை உடலாய்
வியர்த்து கொட்டியது எனக்குள் உனக்கும்தான்
கண்கள் சொக்கி நினைவுகள் இழந்து
நிதானமில்லா சிரிப்பில் நீயும் நானும்
நிதர்சனம்தான் கனவில்லை
அதிகரித்தது மூச்சுக்காற்று.
இளைப்பாறிய தேகத்தில்
இடைவெளி தேவைதானா?



கவிஞர் கிட்டு கிருஷ்ணன், செம்பை

# அந்த நாள்

(நெடுங்கவிதைக் கதை)

மரங்கள் குளித்துப் புத்தாடை அணிந்தன.
மலர்கள் கண்விழித்து புன்னகை அலங்காரம் பூண்டன.
முத்துகளை ஈன்ற பெருமிதத்தில்
புற்கள் தாய்மை சுகத்தில் கிடந்தன.
வண்ணத்தை மாற்றி வானமும் புதிதானது.
விழுப்புண்கள் மறைந்தனவென்று வெள்ளையாய்ச் சிரித்தது வானம்.
பறந்து செல்ல வானவிமானம் கிடைத்ததென திசைகளை நோக்கி
பயணத்தைத் துவக்கியது பருதி.
தீ வைத்தது யாரெனத் தெரியாமல் வெளிச்சங்கள் சுட்டன.
எண்ணத்தைச் சொல்வதற்கு எவருமில்லை என்று
கனவுக்குள் சொல்லிக் கொண்டே கற்பனைகள் கண்விழித்தன.
ஆயிரம் சிந்தனைகள் முளைத்த பின் உயிர்கள் விழித்தன.
போயின துன்பங்கள் என
புகை கக்காமல் புறப்பட்டன பறவை வாகனங்கள்.
திசைகள் தெரியாவிடினும் தவறுகளை நெருங்காத
நேர்மை வாகனங்கள் பறவைகள். கனவுகளை வளர்த்து
கற்பனை வானில் ஏறிடாமல்
இன்றை உணர்ந்து இன்றைக்காக வாழும் நாளை
எதிர்பார்க்காத நாணயவான்கள்.
விடியல் தெரியாவிடினும் எங்கோ தினமும் சரியாய்
விழித்து காலத்தைப் பிரசவிக்கும் சேவல்கள்.
ஓசைகளையும் வாசல்களின் வாசங்களையும் கொண்டு
விழிக்கும் கிராமங்கள்.
இருளும் விடியலும் இணைபிரியும் வேளையில்
தண்ணீர் தெளித்து வழியனுப்பும் கிராமத்து
தேவதைகள்.
மனத்தின் மணத்தை மண்ணில் கோலமாய் நிரப்பி
பூமித்தாய்க்குப் பொட்டு வைக்கும் பெண் பூசாரிகள்.
தேநீர் வாசம் வரும் வரைக்கும் விழித்துக் கொண்டே
படுக்கைக்குள் விடியல் கனவுகள் காணும் வாலிபங்கள்.
திரும்பும் திசையெங்கும் விசிலடிக்கும் அதிகாலை மரங்கள்.
அடர்ந்த காடுகளில் பாதங்கள் செல்லும் ஆனந்தப் பொழுதுகள்.
நெற்றியில் இருந்த நிலவுப்பொட்டு அழிந்தது கண்டு கன்னம் சிவக்கும் வானம்.
கற்பனைக்குள் சிக்கவில்லை என காலத்தைத் திட்டும் சோம்பல் உயிர்கள்.
அபூர்வமாய் இப்படி என்னுள் அசைபோடும் அதிகாலைக் கனவுகள்
கொலை செய்யப்பட்டு அவசரமாய் அழிகின்றன.
என்றேனும் ஒரு நாள்
எல்லாம் கிடைக்குமென எண்ணவும் முடியாமல் நரகத்தில் சிக்கிக் கொண்ட
நகர வாழ்வில் நான் தொலைந்து ஆண்டுகள் பலவாயின.



கவிஞர் இளையவன் சிவா

# அவள்

புன்னகை பூக்களால்
கோர்க்கப்பட்ட அழகான
மலர் மாலை அவள்

தினந்தோறும் பூக்களின்
பட்டிமன்றம் அவள்
கூந்தலில்

யார் அவள் தலையில்
குடி போவது என

புன்னகை மொழியில்
அனைத்தும் பேசி விடும்
அதிசயம் அவள்

அவளின் புன்னகையில்
சிதறிய முத்துக்கள்
அவளது கால் கொலுசின்

சிணுங்கும்
அடையாளங்களின்
பாதயாத்திரையாய்

அவள் பார்வையின்
பாரம் தாங்காமல்
அறுவை சிகிச்சையில்
எந்தன் இதயம்



என் எழுதுகோலில் அவளின்
முகமே தொடக்க வரிகளாய்

அவளது சொற்களின் குவியலில்
ஊமையின் கதாபாத்திரமாய்
என்றும் நான்

கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# தன்முனைக் கவிதைகள்



1
ஒடுக்க ஒடுங்காது
தடுக்க தணியாது
படபடத்து விரிகின்றன
அவளின் சிறகுகள்

2
விமர்சிக்கும் உரிமை
யாருக்கும் இல்லை
வதந்திகள் அளவுக்கு
வலிகள் தெரிவதில்லை

3
மறக்க முயற்சித்து
மனதை உடைக்காதே
காலமே மருந்து
கவலை கொள்ளாதே

4
தலைசிறந்து நீயும்
தரணியில் விளங்குவாய்
தலையாய அமைதியை
திடமாக ஒழுகுகையில்

5
செல்வந்தனின் சுரண்டல்
சிறப்பான வணிகம்
ஏழையின் எதிர்ப்பு
இழிவாகும் வன்முறை

6
கடமைக்கு நீங்கள்
காதலிக்கும் போது
கடுகின் அளவிலேனும்
கருணை உதிப்பதில்லை

7
ஒரு பறவை போல்
இன்பத்தில் மேலெழு
ஒரு இலையைப் போல்
துன்பத்தில் வீழ்ந்திடு

8
பணத்தைச் செலவழிக்காதே
கணத்தைச் செலவழி
பேரன்பைச் சொல்லித்தா
பாரினில் குழந்தைகளுடன்


9
கிடைக்காதது கிடைக்காது
உனக்கானது கிடையாது
கிடைப்பது எதுவாயினும்
உனக்கானது அகலாது

10
தருக்கங்கள் தவிர்த்திடு
நெருக்கடிகள் பழகிடு
தேடல்கள் அடைந்திடு
தேவைகள் சிறந்திடும்

கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# தீவினையச்சம்

தீவினை புரிய தீயோர் அஞ்சார்
ஆவி பிரிந்தாலும் நன்னெஞ்சோர் அறியார்
இன்பம் தருமென்றெண்ணி தீவினை செய்யற்க
துன்பமே தந்திடும் அவ்வினை நீக்கிடுக
தீமை செய்தார்க்கும் தீங்கிழைக்காது செல்க
ஆமைபோல் ஆங்கே புலனடக்கி வெல்க
எவருக்கும் என்றும் கேடுதனை நினையாதீர்
கேடதனை நினைப்போர்க்கே பாடுதனை
அறக்கடவுள் தந்திடுவார் மறவாதீர்
துன்பம் தன்னை வருத்தினால் மகிழாதவர்
என்றும் பிறருக்குத் துன்பந்தராமல் நெகிழ்வாரே
செறுநரும் உறவாட வாய்ப்புண்டு கண்டீர்
பெறுநராய் தீவினைக்கு
நீயிருந்தால் துயரே கொள்வீர்
வறுமை நீங்கவே தீவினை செய்யற்க
அரும்பொருள் பெற்றாலும் இல்லாது நீங்கிடுமே
தன்நிழல் வெயிலில் தனைநீங்காது உலவும்
தீவினை அழல் துயின்றாலும்
உனதடிபற்றியே குலவும்
உன்னை நீயே பெரிதும் நேசிப்பாய்
சிறிதும் பிறருக்கு தீவினை புரிய யோசிப்பாய்
நீதிநெறி அறிந்து தீவினை புரியாதே
ஆதிமுதல் அறவழி நடந்தால்,
கேட்டிற்கு உன்முகவரி தெரியாதே



கவிஞர் குரு. ஜெயந்தி, சிதம்பரம்

# நிலம்

நிலத்தில் உதித்த நிம்மதி உயிருமே
பலமாய் திகழுமே பண்பட்ட விதமாகவே
வளங்களங நிறைந்த வசதியான உறவிலே
களமாய் உயர்ந்து களஞ்சியம் காணுதே

தாய்மை போற்றும் தன்னிகரில்லா இயற்கையும்
சேயாய் வளர்ந்து சேர்க்கும் பெருமையே
ஊட்டிடும் உண்மை ஊட்டமாய் தந்தே
காட்டிடும் கனிவை காவலாய் சிறந்தே



வாடும் போதெல்லாம் வாழ்வைச் சீராக்கி
தேடும் வகையாகவே தேற்றி நிற்குமே
உலக உயிர்களில் உத்தம மனிதரும்
பலமும் பெற்றே பன்முகத் திறனாகவே

வெற்றியைத் தந்திடும் வெண்ணிற நிலவாகவே
கற்றிடும் பாடமாக கவலையும் நீக்குமே
சிற்பியாய் செதுக்கிய சிகரத்தின் வாழ்விலே
உற்றோராய் வளர்க்குமே உரிமை செயலாலே

முக்கியப் பங்கினை முதன்மையாய் செய்தே
சொக்கும் உறவாய் சுரக்குமே நீரும்
வளர்ச்சி பெற்றிட வளமையும் உதவியே
கிளர்ச்சி செய்திடுமே கிளர்ந்து எழும்பியே

பகலாய் ஒளிர்ந்து பல்லுயிர் மகிழவே
இகத்தில் விர்ந்தே இன்னுயிர் காக்குமே
உள்ளங்கள் உவந்தே உன்னதம் பேணியே
வெள்ளமாய் திரளும் வெண்மதி முகமாகவே

கவிஞர் பி. அன்பழகன், கடலூர்

பல கோடி ஆசைகளை தன்னகத்தே பதுக்கியவள்
தன் கவலை மறைப்பதில் வல்லவள்
தேவலோகத்து பரிசம் அவள்
ஆளப்பிறந்த பொக்கிஷம்

சமூக மேடையில் அரங்கேறும்
பல கதாபாத்திரமானவள்
தேசத்தின் மறுமலர்ச்சி
வேலை செய்வது இயந்திரப் பொருள்

தாய்க்குப்பின் தாரமானவள்
பெண் வலிமை உடையவள்
வரமாக வந்த மகாராணி அவள்

அடக்கி ஆளவும் அடங்கி போகவும்
அவள் பிறக்கவில்லை
உறவுகளுக்கு ஒலித்தரும் விளக்கவள்
இவள் காலடியில் நிற்கும் பூமி

வேரோடு பிடுங்கி நட்டாலும்
விருச்சிகமாய் வளருவாள்
பெண் கோட்டையின் உச்சத்தில் பறக்கு
வெற்றிக்கொடி இவளே
பெண் என்றும் சாதிக்க பிறந்தவள்

போட்டி வந்தால் சிங்க பெண்ணாக மாறிவிடுவாள்
பெண் கடவுள் படைத்த புதுமை படைப்பு
பெண்ணுக்கு நிகர் பெண்ணே



கவிஞர் முர்ஷிதா பேகம், இலங்கை

# என் ஆண் தேவதை

என் அப்பாவின்
நினைவுகளுடன் மட்டுமே
வாழ்ந்த எனக்கு
என் அப்பாவுடன்
நிஜமாய் வாழ
கற்று தந்தவன் நீ
உன் அன்பால்
என் ஆண் தேவதையே.



கவிஞர் புன்னகை தூரன் இரா. சங்கர், ஈரோடு

# மான்விழிப் பெண்ணே!

என்னோடு நீயிருந்த
ஒவ்வொரு கணத்தையும்
கவிதையால் நிரப்ப வேண்டுமென
நீ பரிசளித்த நோட்டில்
ஒவ்வொரு பக்கமும்
உன் பெயரை மட்டுமே
கவிதை போல் எழுதி வைத்தேன்!

நீயில்லை என்றாலும்
என்னோடு எப்போதும் பேசிக்கொள்ள
உன் பெயரெழுதிய
கவிதை நோட்டின் பக்கங்களை
காற்று புரட்டித் திருப்பும் போதெல்லாம்
உன் நினைவு என்னைப்
பின்னோக்கி இழுத்து
பசுமையாய்த் தாலாட்டுகிறது!



இயல்பாய்க் கடக்க முடியாமல்
தனிமை தின்ற
ஒவ்வொரு இரவுகளிலும்
தூரத்து நிலவும்
நீயில்லாத துயரத்தைத் தூண்டச்
சிரித்துக் கொல்கிறது!

நீ அழகாய்ப் பிறந்ததே
என்னை அழ வைக்கத்தான்
எனத் தெரியாத
என் போன்ற ஏமாளியை மட்டும்
சுளுவாக எப்படித்
தேர்வு செய்தாய்
மான் விழிப் பெண்ணே!

கவிஞர் யாழிசைச்செல்வா, தேனி மாவட்டம்

# மனிதன் Moneyதன் ஆகிவிட்டான்

மனிதன் Money க்காகத்
துணிந்து விட்டான்
தன் குணத்தையே
அடகு வைத்து விட்டான்

உள்ளத்தில் ஆசையை
வளர்த்துக் கொண்டே
மனதின் நிம்மதியை
அழித்துக் கொள்கிறான்

மற்றவர் சொத்தைச்
சுரண்டி எடுத்து
சொந்த பந்தங்களைத்
துண்டித்துக் கொள்கிறான்

சுக துக்கங்களைப்
பலித்துக் கொண்டு
தேவைகளின் பட்டியலை
தேக்கி ஆள்கிறான்

ஈகையின் ஈடேற்றத்தை
அடைத்துக் கொண்டு
ஏழைகளின் ஏக்கத்தைச்
சுமந்து நிற்கிறான்

குலப் பெருமையை
சீரழித்துக் கொண்டு
நிலப் பெருக்கத்தை
நோக்கியே நகர்கிறான்

கனிவின் வெளிப்பாட்டைத்
தூக்கி எறிந்தே
பணியின் பெருமையைப்
பகைத்து மடிகிறான்

உண்மை அன்பை
உதாசீனப்படுத்தி
உயரிய அந்தஸ்தை
உருக்குலைத்து அலைகிறான்



மொத்தத்தில்
வாணாளையே பாழ்படுத்தி
சித்தம் கலங்கி
கண்ணீரில் மிதக்கிறான்

ஆறறிவுள்ள மனிதா நீ
Money தான் எல்லாம் எனும்
மயக்க நிலை துறந்திடு

மண்ணில் நின் நினைவும்
மங்காப் புகழுடன் நிலைத்து நின்றிடும்

கவிஞர் மாஹிரா அஸ்ஹார், துபாய்

# நன்றே செய் அதை இன்றே செய்


நல்லது செய்து நன்மை உண்டாக்கிடு
நலமாய் வாழ நல்லதே செய்திடு
கடமை உணர்வை கருத்தாய் கொண்டிடு
கண்ணும் கருத்துமாய் கடமையுணர்வை மதித்திடு
உள்ளம் போல உண்மையாய் இருந்திடு
உழைத்து வாழ்ந்த உத்தமனை கண்டிடு
செய்யும் செயலை செம்மையாய் ஆக்கிடு
செல்வம் வந்து செழிப்பாய் வாழ்ந்திடு
இன்று செய்வதை இன்றே செய்திடு
இளமையோடு என்றும் இனிப்பாய் வாழ்ந்திடு
தினமும் எழுந்து தியானம் செய்திடு
திண்ணையில் பேசி தித்திப்பை உருவாக்கிடு
சிந்தனையோடு நாளும் சிகரமாய் எழுந்திடு
சிப்பிக்குள் முத்தாய் சிவப்பாய் தோன்றிடு
நாளும் வளர்ந்து நாளிதழாய் மின்னிடு
நாள்தோறும் புதுமையோடு நாற்காலியில் அமர்ந்திடு
எண்ணங்களை அழகாக்கி எழுத்தை வடிவமைத்திடு
எத்திசையும் நோக்கி எப்போதும் சென்றிடு



கவிஞர் ம. செ. அ. பாமிலா பேகம்

# நிறைவேறா ஆசை

முற்றுப் பெறாத
கவிதையில் எழும்
தொடர்புள்ளி போல்
நம் ஒவ்வொருவருக்குள்ளும்
ஏதோவொரு முற்றுப்பெறா
தொடர்புள்ளி இருந்து
கொண்டுதானிருக்கின்றது.




கவிஞர் அதீனா அபூ உபைதா, ஓட்டமாவடி (கிழக்கிலங்கை)

# மழைமேகம்

உற்றுப் பார்த்தால் கருமேகக் கூட்டம்
ஒரு மணிநேரம் மழை பேயும் அங்கே!
கற்றவரும் தடுமாறுவார் இதற்கு
கல்லாத விவசாயி அறிவார் மழைமேகத்தை!

சுற்றிப்பார்த்தால் சிற்றெறும்பும் சுறுசுறுப்பாய் செல்லும்
சதையற்ற முதுகில் உணவைச் சுமந்துகொண்டு
பற்றில்லா வெட்டுக்கிளியோ அதனைப்
பறிக்கப்பார்க்கும் உழைப்பின்றி சுயநலமாய்!

மயில் அகவும் மணிக்கணக்காய்
மழைமேகத்தை வரவேற்கும் விதமாய்
குயிலுக்கும் ஆசை மயிலாட்டம் பார்க்க
குயில் கூவும்வரை மயில் காத்து நிற்கும்/

எட்டிப்பார்த்து விவசாயி மழைவேண்டி ஏங்குகின்றனர்
எழுச்சியுடன் பயிர்களெல்லாம் எழுந்து நிற்கும்
பட்டிதொட்டிகளெல்லாம் படக்காட்சி போல்
காலைக்கஞ்சி வீட்டில் மதியம் களி தோட்டத்தில்!

கட்டிப்போட்ட மாடு கத்துகிறது
மழைமேகம் கண்டு கட்டிக்கிடக்கும் ஆடும்
அடைஞ்சிருக்கும் கோழியும்
வீட்டுக்குள் போகத் துடிக்குதுதானே!

வானம் பொழிந்தது
மண்ணும் மணக்குது
விவசாயி மனமும் மகிழுது!



கவிஞர் ரா. ஜோதிமணி, தாராபுரம்

# வெற்றிடத்தின் உச்சி



எல்லாமே நிறைந்தும்,
ஏனோ வெற்றிடம் இங்கு.
காற்றோடு கலக்கும் உன் குரல்,
நிரப்புமோ இதனை.

தொலைதூரம் இருந்து
தொந்தரவு செய்யும் உன் காதல்,
ஏக்கமாய் எத்தனை முறை
என்னை வெற்றிடமாகி விட்டது.

கடந்து வந்தேன்,
அத்தனை வெற்றிடங்களையும்;
ஆனால் இன்னமும் கடக்க இயலவில்லை.
வெற்றிடத்தில் வெற்றிடமாக நிற்கிறேன்,
நீ வந்து நிரப்பிவிட, காத்திருக்கிறேன்.

கவிஞர் அதீபா ஹஸன், காத்தான்குடி

# சாதி

பள்ளி பருவத்தில்,
தவறாய் எழுதிய எழுத்தை
அழிக்க தன்னிடம்
அழிப்பான் கேட்டு
சரிசெய்துவிட்டு
புன்னகையயும் சேர்த்து தந்த நண்பன்,
தன்னை விட முதியவரை
பெயர் சொல்லி கூப்பிட்டாய்,
சாதி பெயரை சொல்லி
சண்டையும் செய்தாய்,
கோயில் திருவிழாவில்
சமத்துவத்தையும் மறந்தாய்,
இப்போதுதான் புரிந்தது
கல்வியைவிட நண்பன் கற்றது
சாதியின் கொள்கைகளே அதிகமென்று.
நண்பன் மறந்திருக்கலாம்
நாம் மறக்க வேண்டாம்
கல்வி ஒன்றே நம்மை பெருமைப்படுத்தும்
ஆயுதம் என்று.



கவிஞர் ஏ. மாணிக்கவேல், நீடாமங்கலம்

# மாலையின் மௌனம்

அந்தி சாயும் நேரம்
மனதும் மயங்கும்
நிசப்தங்களின் நிஜங்களில்
செவ்வானமும் சிவக்கும்
புள்ளிணங்கள் கூச்சலிட்டு
தன் கூட்டிற்கு திரும்பும்
மந்தாரை பூக்களும்
மாலையின் மௌனத்தை
மொழியை மணம் வீசும்
ஆகாயமும் கருமையுடன்
முகிலை மறைக்கும்
நிலவின் ஒளியே
நிழலை நிஜமாக்கி
நினைவுகளில் பூத்து
நித்திரையில் தாலாட்டும்!



கவிஞர் உஷா தங்கவேல், அரியலூர்

# பாசமலர்கள்



ஒருக்கிளையில் மலர்ந்த
பூக்கள் நாங்கள்
பாசத்துக்கு யொண்டும்
பஞ்சமிருந்ததில்லை.

தமக்கைகள் தாயாக
தங்கை மகளாக
நாமென்றும்
உறுத்தும் தூசிப்போல
மனதை கவர்தோம்.

கர்சிக்கும் சிங்கமாய் சிலநேரம்
முரண்டிக்கொண்டு
கறிக்கடையாய்
சந்தைக்கடையாய்
அல்லோலகல்லோல பட்டுக்கொண்டு
நொடியில் மாறிக்கொள்வோம்.

பாசமே வைரமென
நாங்கள் ரேகையாய்
ஒன்றானோம்.

தாய் சொல் மந்திரமென
ஒருக்கூட்டில் கூண்டுக்கிளியாய்
வளம் வருவோம்.

ரப்பிடம் தினந்தோறும்
நம் இணைப்பை
பலப்படுத்திக் கேட்போம்.

அடிச்சொக்கொண்டாய்
வார்த்தையால் முட்டிக்கொண்டாலும்
அடுத்த நொடிக்குள்
ஏதுமின்றி சேர்ந்துக்கொள்வோமே.

பொய்யாய் முறைத்து
வீம்பாய் அடம்பிடித்தாலும்
பாசத்தால் கரைதிடுவோமே.

அன்னைக்கு அன்னையாய்
தோழிக்கு தோழியாய்
நாமானோமே
என்றும் வரம் கேட்கிறோம்
இணைந்திருக்கவே.

கவிஞர் சஹீனாஸ் பேகம், முதலைப்பாளி, புத்தளம் (இலங்கை)

# காயத்ரி தேவி

முப்பெரும் தேவியாக காட்சி வழங்கிக் கொண்டிருக்கிறாள்
காயத்ரி அம்மனை பார்ப்பது கோடி புண்ணியமே
காயத்ரி தேவி மஞ்சள் அலங்காரத்தில் சிரித்த முகத்த அழகி
அழகான பட்டு வண்ண சேலை உடுத்தி
தாமரை மலரை சாற்றி வேண்டிக்கொண்டால்
நினைத்த காரியத்தை அன்னையாவள்.
அகிலத்தை ஆள வந்த ஆதிபராசக்தி
அனுதினமும் காயத்ரி அம்மன் ஜொலிக்கிறாள்.
ஸ்ரீ காயத்ரி தேவி வேதங்களின் தாயாக கொண்டவள்.
ஐந்து தலைகள் கொண்ட காயத்ரி தேவி
தாமரை மலரில் கம்பீரமாக வீற்றிருக்கிறாள்.
சங்கு சக்கரம் அங்குசம் கபாலம் தாமரை
கையில் ஆயுதங்கள் ஏந்தி இருக்கிறாள்.
காலையில் காயத்ரியாகவும்
நண்பகலில் சாவித்திரியாகவும்
மாலை சரஸ்வதியாகவும் வீற்றிருக்கிறாள்.
காயத்ரி தேவி அம்மனை பௌர்ணமி நன்னாளில்
தீபமேற்றி மனதார வேண்டிக் கொண்டால்
நினைத்ததை நிறைவேறும் தரும் அன்னையாவள்.
காயத்ரி மந்திரத்தை அனுதினமும் உச்சரிக்கும் போது
உடலும் மனமும் தூய்மை அடையும்
அறிவு ஞானம் கல்வி அருளை வழங்கி கொண்டிருக்கிறாள்.



கவிஞர் மா. நந்தினி, சேலம்

# ராஜாவாய் நடைபோடு



வாழும் காலம் யாவுமே
வளமை நிறைந்த நேரமே!

உண்மை உழைப்பு
நேர்மையென உழைக்கும்
மனிதன் தோல்வியே இல்லை
என்பது உண்மையே!

ஓய்வில்லா உழைப்பும் உறுதி கொண்ட
நெஞ்சமும் நேர்மை கொண்ட
வாழ்வும் நெஞ்சம் நிமிர்த்தும் சமூகத்தில்.

வானமே எல்லையென உற்சாக சிறகு விரித்து
எல்லைகள் இல்லா உழைப்பும்
முயற்சி என்னும் மூலதனத்தை
முன்வைத்து புறப்படு!


வானமே வசப்படும் வசந்தங்கள் தேடி வரும்
வளமையான வாழ்வுக்கு வெற்றியின் பாதையில்
ராஜாவாய் நடைபோடு!

வெற்றியும் விருதுகளும் உன்னை சுற்றி
வலம்வரும் உன் லட்சியம் நிச்சயம்
வெற்றியாய் மெய்ப்படும்!

கவிஞர் ஜேப்பி @ பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# முகவரி தேடி

வறுமையில் வாடுகையில் அனைவரும் தேடுவது
வளமையின் முகவரியை! பொறுமையை இழக்கும்போது
அவசியமான தேடலாகும் அமைதியின் முகவரி!
அஞ்சலட்டை, அலைந்து கொண்டே இருக்கிறது
பெறுநரின் முகவரி சரியாக இல்லையெனில்!
மனம் கவர்ந்தவளின் முகவரியைத் தேடிடும்
இனம்புரியாத் தவிப்போடு காதலன் நெஞ்சம்!
வானில் உலவிடும் மேகக் கூட்டங்கள்
வனவளம் நிறைந்த இடங்களின் முகவரியைத்
தினம் தேடிடுமோ திக்கெட்டும் மழைபொழிய?
வண்டுகள் தேடுவது பூக்களின் முகவரியை!
வறியோர் தேடுவது வள்ளல்களின் முகவரியை!
ஞானம் பெறவிழைவோர் நற்குருவின் முகவரியைத்
தேடியலைந்து பாதம்பணிந்து சீடரென்று ஆகிடுவர்!
ஊக்கம் மிக்கோரின் முகவரியைத் தேடி
ஆக்கம் செல்லுமென அருமையான குறளுண்டே!
எங்கெல்லாம் வசித்தோமோ அந்தந்த முகவரிகள்
நீங்காமல் நினைவேட்டில் நிலைத்திருத்தல் காண்கின்றோம்!
கனவுகளில் தோன்றும் காட்சிகளில் வருமிடங்கள்
எங்குளதோ என்று முகவரியை மனம்தேடும்!
இறைவனின் முகவரியைத் தேடிதினம் அலைவோர்க்கு
உறைகின்றேன் உன்னுள்ளே என்றிடுவான் கடவுளுமே!
செய்யும் செயல்களால் சிறந்தோங்கி நிற்பவரின்
முகவரியை ஒருநாளும் இவ்வுலகம் மறப்பதில்லை!



கவிஞர் ஏ. சீ. சேஷாத்ரி

# மஞ்சள் வெயில்



மாலை கட்ட
சொல்லிவிட்டாள்
வானமங்கை
பொங்கிய நாணத்தை
பூமிக்குள் மறைக்கையில்
இன்னும் சிவக்கிறாளே.
தாளாத தாகமோ
தங்கமாய் உருகி
தளிராய் படர்ந்து

யாருக்கு அழைப்போ
ஆழ்ந்த மயக்கத்தில்
அந்தியும் மஞ்சளாய்
மஞ்சளாய் பூ பூக்குதே
இதோ மனத்தூரிகை
கவிதை தீட்டுகிறது
மதுரமான பொன்னந்தியே
மயக்கம் செய்கிறாய்
மனம் மீளாத ஆனந்தம் பொழிகிறது

மறக்க செய்யும்
மஞ்சள் வெய்யிலே
ஆடும் பூந்தளிரை
நீ முத்தமிட்டதும்
சட்டென தலைகுனிந்த நளினத்தில்
இமைக்குடை படபடப்பில்
ஏனிந்த தாண்டவம்

அறியாது போகுமோ அகமும்
கொய்ந்தவன் வருகையும்
சேர்ந்தே ரசிக்கையில்
செஞ்சாந்தும் கலைந்தது
வண்ணம் தீட்டியவன்
தூரிகை உறக்கத்தில் மடிக்குள்
இருளின் இதமான தொடுகையும்
குலுங்காத அமைதியும்
நீரோடை மென்மைக்குள்

கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டினம்)

# எனது விழியில் உனது பார்வை

ஏக்கத்தின் பக்கத்தில்
ஏடாய் காத்திருக்க
தாக்கத்தின் மத்தியில்
தவமாய் நான் கிடக்க

கொவ்வைக் கிளியாய்
கோபம் இரசிக்க
அவ்வையின் பாடலாய்
அயராது ஆனந்தமளிக்க

புன்னகையில் பூத்த
புதுமலராய் மலர்ந்திருக்க
துன்பமதை தூரவீசி
துள்ளிடும் மனதே

காதலின் கணைகளில்
கருவாய் உருவாகி
மோதல் காணாத
மோகம் உன்னால்

நெஞ்சத்தில் மஞ்சம்
நேசத்தில் நீவிரிக்க
வஞ்சமில்லா சுவாசத்தில்
வஞ்சியும் தஞ்சமாயிருக்க

எனது விழியில்
உனது பார்வை
சிறகு விரிக்கும்
சிற்பமாய்ச் செதுக்கும்



கவிஞர் தமிழ்நதி கிருஷ் அபி

# அன்னை

அவள் கருவறையில் சுமந்து
ஆண்டவனுக்கு நிகராவனவள்
இந்த ஜென்மமல்ல
ஈரேழு ஜென்மம் என்றாலும்
உயிர் பிரசவம் அவளாலே
ஊருக்கு அறிமுகம் செய்தால்
எனக்கு பாக்கியமே
ஏறுநடை எழுத்துலகில்
ஐயமில்லை அன்னையாலே
ஒளியேற்றியவள் இன்று
ஓவியமாய் நிழற்படத்தில்
ஔசியம் இருக்குமென்பதை
அஃதே தீர்மானித்தாள் போலும் அன்றே
இன்றில்லை இவளுடன்



கவிஞர் ஞா. கோமதிதேவா, பண்ருட்டி

தடைகளைத் தகர்த்து
தன்னம்பிக்கையுடன் எழுந்திடு
தரணியும் உன் வசமே!



கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

# இயற்கை காதல்

அடர் வனத்தில்
அத்தனை மரங்கள்
இருக்கும் போது
அந்த மரத்தின் மீது
மட்டும்
ஏன் வந்தமரவேண்டும்?
அந்த பறவை.
தன் அலகால்
கிளைகளை
ஏன் வருடவேண்டும்?
ஒருவேளை
காதலாக இருக்குமோ?
இளைப்பாறி
சிறகடித்து
பறந்து செல்லும்
பறவையின் அழகை
கண்சிமிட்டாமல்
கண்ணுக்கெட்டிய
தூரம் வரை
பார்த்து
ரசித்துக்கொண்டே
இருக்கிறது
காதல் வயப்பட்ட மரம்!



கவிஞர் இளங்கோவன் மணியன், திருச்சி

# முயற்சியால் ஆனது இவ்வுலகு

அடிமைச் சமுதாயமே அறிவாள் தூக்குகிறது
அறிவார்ந்த சமுதாயம் சிந்திக்கிறது
ஒன்று யார் சரி யார் தவறு சண்டையிடுகிறது
மற்றொன்று எது சரி எது தவறு என விவாதிக்கிறது

விவாதம் கேள்விக்கணைகளை தொடுக்கும்
கேள்விகளால் சிந்தனை சிறகடிக்கும்
சிந்தனை செயல்களுக்கு வித்திடும்
செயல்கள் தவறுகளை பிரசவிக்கும்



தவறுகள் பாடங்களை கற்பிக்கும்
பாடங்கள் படிப்பினை ஆகும்
படிப்பினை பாண்டித்தியம் தரும்
அறிவார்ந்த சமுதாயம் அங்கே ஆட்சி செய்யும்

முடியும் எனும் சொல்லே முயற்சிக்கு வித்திடும்
முடியாது எனும்போது சிலந்தி வலை பின்னும்
முடியும் என்றால் தான் எழ வேண்டும்
பின்னர் நிற்க வேண்டும்! நடக்க வேண்டும்
பறக்க வேண்டும்! பந்தயத்தில் ஓட வேண்டும்!

பிறக்கும் போதே நிச்சயம் தான் இறப்பும்
இடையில் மருத்துவம் என்ற மடத்தனம் எதற்கு?
வெந்ததை தின்று விதி வந்தால் முடிவது வாழ்க்கையா?
வீறு கொண்டு எழுந்து விதியை வெல்வது வேட்கையா?

எல்லாம் இங்கே ஒரு கணக்கு
முதலில் வரும் பிணக்கு
முனைந்தால் இமயம் காலடியில்
முயலாவிட்டால் இருப்பே இருப்பாய் கனக்கும்

மனித முயற்சியால் ஆனது இவ்வுலகு
தளர்ச்சி வந்தால் வரும் தாழ்வு
தளராமல் முன்னேறு! உண்டு வாழ்வு
தடம் பதித்தால் பேர் சொல்லும் வரலாறு

கவிஞர் முனைவர் கதிர்வேல் தனியரசு, திருச்சி

# சுந்தரராஜன் கவிதைகள்

## ஞாபக சேமிப்பாய்



சரியாய் யூகத்திற்றவை
சாதித்த நேரத்தை
உறவுகளோடும்
தோழமைகளோடும் கழித்த
உவகைப் பொழுதுகளை
எதிர்பாராதவைகளை
எதிர்கொண்ட கணங்களை

சறுக்கலிலிருந்து மீண்ட நேரத்தை
மூளையின்
ஞாபக அடுக்குகளில்
மிகப்பத்திரமாய் சேமித்தால்

பின்னர்
நம்பிக்கை ஆட்டம்
காணும்போதும்
மலரும் நினைவுகளாய்
எண்ணி மகிழவும் உதவும்

********

## எப்பொழுதுமேவா?

ஒரு தவறான பேச்சு
ஒரு சரியில்லாத செயல்பாடு
ஒரு அவசியமற்ற கோபம்
ஒரு நிகழ்வில் புதுப்பிப்பது இல்லாது
என்பதை வைத்து
சக மனிதர் மீது
அபிப்பிராயம் கொள்ள வேண்டாமே.

தவறாய் எண்ணம் கொண்டு
தொடர்பு கொண்டால்
தவறாய் தெரியும்

இடையில் காலம் என்ற
ஒன்று உண்டு
மாற்றம் நிகழ்ந்திருக்கலாம்

இந்த கணத்தில்
நிகழ்வுகளை வைத்தே
எடை போடவேண்டும்.

கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை

முரட்டு சிங்கிள் என்றொரு வாட்ஸ்அப் குழுமம்
கல்யாணம் ஆனவர்கள் லெஃப்ட் ஆயினர்
ஒரு சில மாதங்களில் இணைந்தும் கொள்கின்றனர் தானாகவே
***

தமிழ் சினிமா கதையில் எந்த நாடு சென்றாலும்
அங்கே ஒரு தமிழ் பேசும் டாக்ஸி டிரைவர் இருப்பான்
அவன் அதிகமாக பேசுவான் என்பது குறிப்பிடத்தக்கது
***

இசையோடு இணைய
ஹெட்போன் மட்டும் போதாது .
தனிமையும் வேண்டும்
***

உணர்ச்சிகளை
அடக்குகிறோம்
ஸ்மைலி பொம்மைகளில்
***

உண்மையில்
இறுதி ஊர்வலம்தான்
புனித பயணம்
***

கண்ணாடிக்கும் பிறருக்கும் தெரிவது
உன் பிம்பம் தான்
உண்மையில் உன் முகம்
உனக்கு மட்டுமே தெரியக்கூடிய ஒன்று
***

கன்னம் உப்பவேண்டுமா
மனதை
முகமாக்கு
***

வானம் என்பது
ஆன்மாக்களின்
பூமி
***



புடவைகள்
உண்மையில் புனிதப்படுவது
குழந்தைக்கு தொட்டிலாகும்போதுதான்
***

குழந்தை
சுண்டு விரல் நகம்
அதிசயம்

கவிஞர் சிரஞ்சீவி இராஜமோகன், கும்பகோணம்

## பயப் பந்து

## அத்தியாயம் 23

(புதினம்)



நரிமன் பாயிண்டிலுள்ள கடற்கரையின் அருகில் அமர்ந்திருக்கும் பன்னிரண்டு மாடிக் கட்டிடமான மிட்டல் டவரின் ஐந்தாவது மாடியில் தன் அறையில் சிகரெட்டை வேகமாக இழுத்துப் புகையை அறைமுழுவதும் பரப்பிக்கொண்டிருந்தார் ஜே.கே.

திடீரென்று தொலைபேசி அழைக்க, எடுத்து "என்ன விஷயம்" என்றார்.

"ஸார்... உங்களைச் சந்திக்க ராஜேஷ் குப்தா டெக்னோ கிராப்ட் கம்பெனியிலிருந்து வந்திருக்கிறார்" என்றாள் டெலிபோன் ஆபரேட்டர்.

"நான் யாரையும் பார்க்கிற மூடில் இல்லை. ரூபி அவனிடம் நாளைக்கு இதே நேரத்திற்கு இங்கே வரச் சொல். இனி எந்தத் தொலைபேசி வந்தாலும்... அது கடவுளே இருந்தாலும் எனக்கு தொடர்பு கொடுக்காதே." என்று சொல்லி விட்டு நேரடித் தொடர்பு தொலைபேசியின் தொடர்பைத் துண்டித்து விட்டு திரும்ப சிகரெட் பற்றவைத்துக் கொண்டார்.

உள்ளுக்குள்ளே சிறியதாக ஒரு பயப் பந்து சுருண்டு உருண்டோடியது.

'தமிழரசு எங்கே போயிருப்பான்... சே! இந்தப் பாபுவை நம்பியது தவறோ? இப்படி அவனை கோட்டை விட்டு விட்டு விட்டார்களே...'

ஒவ்வொரு நாளும் தமிழரசு எங்கே போயிருக்கிறான்? என்ன செய்து கொண்டிருக்கிறான் என்ற செய்திகளோடு ராணியை சமதானப்படுத்திக் கொண்டிருந்தேன். இனி அவள் கேட்டால் என்ன சொல்லப் போகிறேன்?'

நேற்றுவரை அவன் கப்போலி போகும் வரை சரியாக கண்காணித்தவர்கள் எப்படியோ அவனைத் தவற விட்டிருக்கிறார்கள்.

கவிஞர் இரஜகை நிலவன்

சே! என் ஒரே மகன் .. இப்படி உணவிற்கு கஷ்டப்பட்டு...
அவருக்கு அந்த ஏ.சி . குளிரிலும் வியர்த்ததுக் கொட்ட ஆரம்பித்தது. கோட்டைக் கழற்றி நாற்காலியின் பின்னால் போட்டுக்கொண்டு டையை கழற்றி விட்டுக் கொண்டார்.

வயிறு பசிக்க ஆரம்பித்தது. எதையும் சாப்பிட விருப்பமில்லாமல் குட்டிப் போட்ட பூனையைப்போல அங்குமிங்கும் சுற்றிக் கொண்டிருந்தார். மொபைல் போன் சப்தித்தது. எடுத்து பார்த்தார் வீட்டிலுருந்து தான் போன். 'இவளுக்கு நான் என்ன சொல்லப் போகிறேன். இவ்வளவு பெரிய பிள்ளை தொலைந்து போய் விட்டானே' என்றா? போனை தொடர்பு படுத்தி "ராணி கொஞ்டம் அவசரக் கூட்டத்தில் இருக்கிறேன். அப்புறம் போன்பண்ணுகிறேன்." என்று சோல்லி தொடர்பைத் துண்டித்து விட்டு மொபைல் போனையும் அணைத்து மேஜையில் எறிந்தார்.

எதற்காக... ஏன்.. என் மகன் அதுவும் இதற்கு மேல் குழந்தை இருந்தால் சமாளிக்க முடியாதென்று ஒரே பையனாகப் பெற்றெடுத்த இவன்.. என்.. வியாபார சாம்ராஜ்யத்தைக் கவனிக்காமல் இப்படி தனியாக... சுயமாக நிற்க முயற்சிக்கிறானே... இவனை என்னச் சொல்ல...என்ன செய்ய...

வீட்டிற்கு திரும்பி விடுவான் என்ற நம்பிக்கையில் ஒரு மாதத்திற்கும்மேல் ஆகி விட்டது. இனி அவனுக்கு புதிய வாழ்க்கை பழகி விட்டால் திரும்ப வருவதற்கு அவனுக்கே கடினமாகி விடும்.

அந்த அளவிற்கு விட்டு விடக் கூடாது. நான் என் மகனை திரும்ப என்னிடம் வரச் சொல்வதற்கு ஏதாவது செய்தாக வேண்டும்...

அவன் ஆரம்பிக்கும்... அவனுக்கு வருமானம் தரும் ஒவ்வொரு ஆணிவேரையும் பிடுங்கி தீயில் போடலாம். அவனுக்கு உதவி செய்கிற.... உணவு கொடுக்கிற ஒவ்வொருவரையும் மறைமுகமாக மிரட்ட ஆரம்பித்தால்... அவனுக்கு வேறு வழியில்லாமல் என்னிடம் சரணடைவதற்கு வசதியாக இருக்கும்.

கவிஞர் இராஜகை நிலவன்

ஆனால் இந்த விஷயம் அவனுக்குத் தெரிய வந்தால்... அப்புறம் அவன் என்னையே வெறுக்க ஆரம்பித்து விடுவான். அதுவே பெரிய பிரச்சினையாகி விடும்.
இன்டர் காமை அழுத்தி "ஒரு கப் காபி கொண்டுவரச் சொல்." என்று சொல்லி விட்டு திரும்ப மொபையில் போனை தொடர்பு ஏற்படுத்தி பாபுவனக் கூப்பிட்டார். "பாபு, ஏதாவது செய்தியுண்டா?"
"இல்லை சார். நம்ம பசங்க இவ்வளவு மோசமாக இருப்பார்கள் என்று எதிர் பார்க்க வில்லை. இன்று இரவிற்குள் நானே தேடிப் பார்த்து நல்ல செய்தியோடு வருகிறேன் சார்." என்றது எதிர்முனை.

"எப்படி கோட்டை விட்டீர்கள் என்று ஆச்சரியமாக இருக்கிறது." என்று எரிச்சல் பட்டவர் "சரி.. நம்முடைய நெட் வொர்க் எவ்வளவு பெரிதாக இருக்கிறது. இவ்வளவு பெரிய ஆள்படை நம்மிடமிருந்த பிறகும் என் பையன் எங்கே போனான் என்பதை நம்மால் தொடர முடிய வில்லை என்பதுதான் உண்மையில் கோபமும் ஆத்திரமுமாக இருக்கிறது" என்றார்.

"வெளியே தெரியாமல் இரகசியமாக சொல்லப்பட வேண்டிய விஷயம். நாம் மற்றொருவருக்குத் தெரியாமல் செயல்பட வேண்டியுள்ளது. நான் இரவிற்குள் நல்ல செய்தி சொல்கிறேன்."

"பாபு... இல்லையென்றால் ஒரு தனியார் துப்பறியும் நிறுவனத்தில் ஒப்படைத்து விடலாம். நாம் பணத்தைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்" என்றார்.

"பணம் ஒரு பிரச்சினை இல்லை என்பது எனக்குத் தெரியும் சார். ஆனால் நாம் எடுக்கின்ற ஒவ்வொடு முடிவும் உங்கள் பையனுக்குத் தெரிய வந்தால் அது உங்களுக்கு எதிராகத் திரும்பி விடக்கூடாது என்பதுதான் முக்கியமாக இருப்பதால் ஒவ்வொன்றையும் யோசித்து செய்ய வேண்டியதிருக்கிறது."

"சரி... எதையோ செய்யுங்கள். எவ்வளவு பணம் வேஸ்ட்...எத்தனை வியாபார விஷயங்கள் அங்கங்கே நின்று கொண்டிருக்கிறது.... எத்தனை

பயப் பந்து

அத்தியாயம் 23

(புதினம்)

"சரி... எதையோ செய்யுங்கள். எவ்வளவு பணம் வேஸ்ட்...எத்தனை வியாபார விஷயங்கள் அங்கங்கே நின்று கொண்டிருக்கிறது.... எத்தனை மீட்டிங் கேன்சலாகி விட்டது. எத்தனை ஆர்டர்கள் பெண்டிங்கிலே இருக்கிறது... எத்தனை இடங்களில் தயாரிப்பு குறைந்து விட்டது" கத்தினார் ஜே.கே.



தொடரும்...

கவிஞர் இரஜகை நிலவன்

# காந்திய கவிஞர் – இராமலிங்கம் பிள்ளை

## கட்டுரை

வெங்கட்ராமன் பிள்ளை அம்மணி அம்மாள் தம்பதியருக்கு எட்டாவது குழந்தையாக 19.10.1888ல் பிறந்தார்.

**கவலை உனக்கில்லை ஒத்துக்கொள் - 'கைத்தொழில்' நாமக்கல் கவிஞரின் கவிதையிலிருந்து**



சிறுவயதிலேயே படம் வரைவதில் ஆர்வம் கொண்டிருந்த இவர் பள்ளிக்கூட வகுப்புகளில் பாடம் படிப்பதைவிட பாடம் சொல்லித்தரும் ஆசிரியரின் படம் வரைவதில் அதிக கவனம் செலுத்தினார். இதனால் தலைமை ஆசிரியரிடம் பிரம்படிபட்டதும் உண்டு. ஆயினும் எலியட் என்னும் 'ப்ரின்ஸிபல்' இவரை பாராட்டி ஒருபேனாவை பரிசளித்தார்.

**படிப்பினில் பட்டம் பெற்றான் பந்துகள் கையாற் காலால் அடிப்பதில் பதக்கம் பெற்றான் — 'அவன்' நாமக்கல் கவிஞரின் கவிதையிலிருந்து**

கோயமுத்தூரில் பள்ளி இறுதி படிப்பு மெட்ரிக்கில் முதன்முறை தோல்விக் கண்டாலும் அடுத்த ஆண்டு தேர்ச்சி பெற்று திருச்சியில் எஸ்.பி.ஜி கல்லூரியில் எப்.ஏ வகுப்பில் சேர்ந்தார். பள்ளி ஆண்டு விழாவின்போது கணக்கு பாடத்தில் தவிர மற்ற எல்லா பாடங்களிலும் இவர் முதல் அல்லது இரண்டாம் பரிசு நிச்சயம் பெற்றுவிடுவார். ஆங்கில பாடத்தில் அனேகமாக முதல்பரிசு வாங்குவார். தமிழ், ஓவியம், மொழிபெயர்ப்பு, கட்டுரை எழுதுதல், முதலானவற்றில் ஒவ்வொரு ஆண்டும் முதல்பரிசு இவருக்குதான் கிடைக்கும்..தேகப்பயிற்சி விளையாட்டுகளிலும் உயரம்தாண்டுதல், நீளம்தாண்டுதல், ஓட்டப்பந்தயங்களில் இவர் முதல் பரிசும் இரண்டாம் பரிசும் பெற்றுள்ளார்.

திரு. அ.வில்சன், இதழாசிரியர்

நாடகப்பிரியன்; நல்ல நாட்டிய கலையில் ஆசை -'அவன்' நாமக்கல் கவிஞரின் கவிதையிலிருந்து

சிறுவயதிலிருந்தே நாடகங்கள் பார்ப்பதில் ஆர்வம் கொண்டிருந்தார். இதனால் நாடக பாடல்களில் ஆர்வம் ஏற்பட்டது. கூத்தில் கோமாளிகள் சபையில் பேசுகின்ற ஆரவாரத்தை அடக்கவும், தூங்குபவர்களை எழுப்பவும் சில வேடிக்கையாக பாடும் பாடல்களை திரும்பத்திரும்ப பாடுவார்கள்.

'கூத்து பார்க்க வந்தீர்களா? இங்கே குசலம் பேச வந்தீர்களா?
பாட்டு கேட்க வந்தீர்களா? இங்கே பழமை பேச வந்தீர்களா?
ஆட்டம் காண வந்தீர்களா? காலை நீட்டி தூங்க வந்தீர்களா?'

இரவு கூத்து பார்த்துவிட்டு, தூங்கி எழுந்ததும் சிறுவன் ராமலிங்கத்திற்கு காலை உணவு சாப்பிட சென்றபோது இவருடைய தமக்கையார் நாத்திமுறையுள்ள ஒரு பெண்ணுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டிருந்தார். 'அக்கா! சாதம் போட வந்தீர்களா? இங்கே சண்டை போட வந்தீர்களா? என்று பாடிக்கொண்டே ஆடினார். இதைக் கண்ட அனைவரும் சிரிப்பும் மகிழ்ச்சியும் வந்துவிட்டது. மகனுக்கு உடனே சோற்றை பரிமாறினார் அன்னை.

தெருக்கூத்து பாட்டின் மூலமாக கவிபாடும் சக்தி இவருக்கு ஏற்பட்டது. கிட்டப்பா சகோதரர்கள் நாமக்கல்லுக்கு வந்தபோது அவர்களுக்கு பாட்டு எழுதிகொடுத்தார். மேலும் சில நாடக கம்பெனிகளுக்கும் பாட்டு போட்டும், சீன்கள் எழுதியும் தந்துள்ளார்.

சித்திரத்தில் மிக உயர்ந்த சிற்ப நூலின் அற்புதம்— 'தமிழன்பாட்டு'நாமக்கல் கவிஞரின் கவிதையிலிருந்து

1912ஆம் ஆண்டு இந்தியாவை ஆண்டுக் கொண்டிருந்த இங்கிலாந்து மன்னர் ஐந்தாம் ஜார்ஜ் அவர்களுடைய முடிசூட்டுவிழாவில் டெல்லியில் நடைபெற்றது. தனது நண்பர் மாணிக்க நாயக்கர் என்பவருடன் டெல்லி

சென்றார். முடிசூட்டு விழாவில் ஒரு கண்காட்சியும் நடைபெற்றது. அந்த கண்காட்சியில் ராமலிங்கம் வரைந்த ஒரு பெரிய ஓவியமும் இடம்பெற்றது. அந்த ஓவியத்தை பாராட்டி இவருக்கு தங்கப்பதக்கம் வழங்கப்பட்டது. அந்த தங்கப்பதக்கத்தை டெல்லி செங்கோட்டையில் நடந்த ஒருவிழாவில் மேரி மகாராணியார் இவர் உடையில் அணிவித்தார். இதனால் விளம்பரம் இல்லாமல் இருந்த இவரது ஓவிய தொழிலுக்கு கிடைப்பதற்கு அரிய கிராக்கி ஏற்பட்டது. சித்திரவேலையை தொழிலாக நடத்த தயங்கிய இவர் இதன்பின் தைரியமாக தொடங்கினார். ஆர்டர்கள் இவரை தேடி வந்தன.

காந்தியென்ற சாந்தமூர்த்தி தேர்ந்து காட்டும் செந்நெறி—'கத்தியின்றி ரத்தமின்றி'நாமக்கல் கவிஞரின் கவிதையிலிருந்து

இவருக்கு சுதந்திரக் கனலை மூட்டியவர் அரவிந்த்கோஷ் ஆவார்.
முதலில் திலகரின் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, பின்பு காந்தியாரின் பக்கம்
திரும்பி மற்ற தலைவர்களே மனதில் இல்லாமல் காந்தியின் கொள்கைகளை பின்பற்றலானார்.

'கத்தியின்றி ரத்தமின்றி; யுத்தமொன்று வருகுது
சத்தியத்தின்நித்தியத்தை நம்பும் யாரும் சேருவீர்'

என்னும் பாடலை உப்புச் சத்தியாகிரகத் தொண்டர்களின் வழிநடைப் பாடலாகப் பாடிச் செல்வதற்கு இயற்றிக் கொடுத்தார்.


பாரதி எனும் பெயரைச் சொல்லு - கெட்ட பயமெனும் பகைவனை வெல்லு—'பாரதி எனும் பெயர்' நாமக்கல் கவிஞரின் கவிதையிலிருந்து

புதுச்சேரியில் ராமலிங்கம் பாரதியாரை காணச்சென்றார். இவரை 'நல்லஆர்டிஸ்ட்' என்று பாரதியாருக்கு அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டார்." ஓ! ஓவியக்கலைஞரா நீர்! எம்மை ஓவியத்தில் தீட்டும். நாம் உம்மை

திரு. அ.வில்சன், இதழாசிரியர்

காவியத்தில் தீட்டுவோம்" என்றார் பாரதியார்."இவர் பாடல்களும் புனைவார்" என்று பாரதியாரிடம் தெரிவிக்கவே, பாரதியார் இவரை பாட சொன்னார், இவரும் பாடவே பாட்டை கேட்ட பாரதி, "பலே பாண்டியா பிள்ளை! நீர் ஒருபுலவன் என்பதில் ஐயமில்லை!" என்று பாராட்டினார்.

குடிப்பதை தடுப்பதே கோடிகோடி புண்ணியம்—'குடிப்பதை தடுப்போம்' நாமக்கல் கவிஞரின் கவிதையிலிருந்து



இவரது முதல் கவிதை 1914 வெளிவந்தது. சுகாதார இலாகாவினரின் வேண்டுகோளை ஏற்று மதுவிலக்கு பிரச்சாரத்திற்காக 'அரவணை சுதந்திரம்' என்ற நகைச்சுவை நாடகத்தை எழுதினார். அந்த நாடகமும் பாட்டுகளும் நூல் வடிவமாக அச்சிடப்பட்டு பல ஊர்களுக்கு அனுப்பப்பட்டது. திருச்செங்கோடு மக்கள் அந்த நாடகத்தை ராஜாஜியின் தலைமையில் நடத்தினர். ராஜாஜி நாடகத்தை பாராட்டி ராமலிங்கம் அவர்களுக்கு கடிதம் எழுதி வாழ்த்தினார். நாமக்கல் சுகாதார கொண்டாட்ட கமிட்டியின் பல புகழுரைகளோடு தங்கப் பதக்கத்தை பரிசாக அளித்தனர்.

தமிழன் என்றோர் இனமுன்று; தனியே அதற்கோர் குணமுண்டு—'தமிழன் இதயம்'நாமக்கல் கவிஞரின் கவிதையிலிருந்து

1949 இல் தமிழக அரசு இவரை 'ஆஸ்தான கவிஞராக' நியமித்து சிறப்பு செய்தது.
1971 இல் இந்திய அரசு இவருக்கு பத்மபூஷன் பட்டம் வழங்கியது. 'காந்தியகவிஞர்' என்று ராஜாஜி அவர்கள் பாராட்டினார். ஐம்பதிற்கு மேற்பட்ட பல பட்டங்களை பெற்றவர். இவர் 1953இல் சாகித்திய அகாதமியின் உறுப்பினராக பணியாற்றினார். இவர் இருமுறை 1956, 1962ல் தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினர் செயலாற்றியவர்.

திரு. அ.வில்சன், இதழாசிரியர்

# காந்திய கவிஞர் – இராமலிங்கம் பிள்ளை

## கட்டுரை

தமிழனென்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா—'தமிழன் பாட்டு' நாமக்கல் கவிஞரின் கவிதையிலிருந்து

கவிஞர் ராமலிங்கம் பிள்ளை அவர்கள் பலவகை இலக்கியங்களைப் படைத்துள்ளார். மலைக்கள்ளன், தாமரைக்கண்ணி, கற்பகவல்லி, மரகதவல்லி, காதல் திருமணம் போன்ற புதினங்களை எழுதியுள்ளார். மலைகள்ளன் திரைப்படமாகவும் எடுக்கப்பட்டது. அரவணை சுந்தரம், மாமன் மகள் என்ற நாடகங்களையும் படைத்துள்ளார். இலக்கியஇன்பம், திருவள்ளுவரும் பரிமேலழகரும், திருவள்ளுவர் திடுக்கிடுவார், வள்ளுவரின் உள்ளம், காந்தியடிகளும் கம்பநாட்டாழ்வாரும், கம்பன் கவிதை, இன்பக் குவியல் ஆகிய இலக்கிய திறனாய்வு நூல்களையும் இயற்றியுள்ளார். கப்பலோட்டியதமிழன், தேசபக்தர் மூவர் எனும் வரலாற்று நூல்களையும், என்கதை என்ற தன்வரலாற்று நூலையும் படைத்துள்ளார். அவளும் அவனும், அன்பு செய்த அற்புதம், விடுதலைக்கு விதை விதைத்த வீரர் கூட்டம், காந்தி சரித்திரம், நொண்டிச் சிந்து, நாட்டுக் கும்மி போன்ற சிறுகாப்பியங்களையும் எழுதியுள்ளார். தேசபக்தி பாடல்கள், பிரார்த்தனை, தமிழன் இதயம், காந்தி அஞ்சலி, மலர்ந்த பூக்கள், கவிதாஞ்சலி, சங்கொலி, தமிழ் மணம், தமிழ்த்தேன், நாமக்கல் கவிஞர் பாடல்கள் என்ற கவிதைத் தொகுப்புகள் இவர் எழுதியவைகள். திருக்குறள் புதுஉரை என்ற விளக்க உரைநூலையும் உருவாக்கியுள்ளார்.

மரணமென்ற எண்ணமே மனதிலின்றி செய்திடும் திரணமாக எதையுமே தியாகம் செய்ய தந்திடும் —'கொடியை போற்றி கும்பிடு'நாமக்கல் கவிஞரின் கவிதையிலிருந்து

24.08.1972 அன்று நாமக்கல் கவிஞர் இயற்கை எய்தினார். தமிழக அரசு இவரது நினைவாக நாமக்கல் கவிஞர் மாளிகை என ஒரு வளாகத்தை நிறுவி சிறப்பு செய்துள்ளது.

திரு. அ.வில்சன், இதழாசிரியர்

# நாளை நமதே

## விடியல் என்பது
## கிழக்கில் அல்ல
## நம் உழைப்பில்

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை



தொடர்பிற்கு :

9597887847
8870884969

# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com